**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 110/2025**

**வா.சா.1 – விஜய் (எ) முகமது பாட்சா**

**<u>16–02–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது பெயர் விஜய் (எ) முகமது பாட்சா என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். விஜய் என்ற பெயரை எனது தாயாரின் இறப்பிற்கு பிறகு வைத்துக்கொண்டேன் என்றால் எனது தாயாரின் இறப்பிற்கு முன்பே வைத்துக்கொண்டேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் எனது தாயாரின் இறப்பிற்கு பின்னிட்டு மாற்றிக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பெற்றோர் வைத்த பெயர் முகமது பாட்சா என்றால் சரிதான். முகமது பாட்சா என்ற பெயரில் தான் பள்ளிச்சான்றிதழ்கள் உள்ளது என்றால் சரிதான். எனது ஆதார் கார்டு, Driving Licence, Passbook ல் முகமது பாட்சா என்றுதான் உள்ளது என்றால் சரிதான்.

2. எனது பெற்றோர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் அவர்கள் பிரிந்துவிட்டதால் எனது பெயரை விஜய் என்று மாற்றிக்கொண்டேன் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு விஜய் என்று மாற்றியுள்ளேன் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்ட ஆதார் கார்டில் முகமது பாட்சா என்றுதான் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா வேறு திருமணம் செய்துகொண்டதால் அவர் மீது இருந்த கோபத்தில் எனது பெயரை விஜய் என்று மாற்றியுள்ளேன் என்றால் சரிதான். விஜய் என்று பெயர் மாற்றியதற்கு நோட்டரி அபிரவிட், அரசு இதழில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். முகமது பாட்சா பெயரில் இருந்து ஓட்டுனர் உரிமத்தை விட்டு விட்டு விஜய் பெயரில் புதிக ஓட்டுனர் உரிமம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3. புதிய பெயரில் ஓட்டுனர் உரிமம் பெற்றபோது பழைய பெரயில் இருந்த ஓட்டுனர் உரிமம் பற்றி சொல்லவில்லை. MVI சட்டப்பிரிவு 6ன் கிழ் தண்டனைக்கு உரியது என்றால் தெரியாது. Passport எப்போது எடுத்தேன் என்றால் 5 வருடம் இருக்கும். Passport எடுப்பதற்கு பள்ளிச்சான்றிதழ் கொடுத்துதான் வாங்கினேன் என்றால் ஆதார் மட்டும்தான் கேட்டார்கள். வங்கி கணக்கு புத்தகம், வருமானவரி கணக்கு அட்டை, வாக்காளர் அடையாளர் அட்டை, பள்ளிச்சான்றிதழ் ஆகியவற்றை கொடுக்காமல் Passport எடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

4. Passport அலுவலகத்தில் மேற்படி ஆவணங்கள் கேட்டு இருப்பார்கள் என்றும், நான் அதனை மறைத்து போலியாக விஜய் என்ற பெயரில் Passport வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாங்கியுள்ளது தண்டனைக்கு உரிய குற்றம் என்றால் சரியல்ல. பெற்றோர் வைத்த பெயர் முகமது பாட்சா என்றபோது அரசிதழில் பெயரை மாற்றாமல் நானாக ஆவணங்களில் பெயரை மாற்றி உறுவாக்கியுள்ளதால் அது தண்டனைக்கு உரிய குற்றம் என்றால் சரியல்ல. எனது தாயாரின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. வாரிசு சான்றிதழை தாக்கல் செய்ததால் தான் வாரிசுகள் பற்றி தெரியவரும் என்றால் நானும் எனது தங்கை மட்டும்தான் வாரிசுகள்.

5. எனது பிறந்த தேதி 14.01.1983 ஆகும். எனது பிறப்புச்சான்றிதழில் எனது பிறந்த தேதி சரியாக உள்ளது. எனது பள்ளிச்சான்றிதழில் எனது அப்பா தேதியை தவறாக கொடுத்துள்ளார். எனது பள்ளிச்சான்றிதழை Passport அலுவலகத்தில் கொடுத்தால் பிறந்த தேதி மற்றும் எனது பெயர் மாறியுள்ள விபரங்கள் தெரியவரும் என்பதால்தான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் Passport எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் நாளிதழ் அறிவிப்பு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

துாயகரங்களுடம் நான் இந்நீதிமன்றத்தை அனுகவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. நான் சட்ட நடைமுறையை பின்பற்றாமல் மோசடியாக ஆவணங்களை உறுவாக்கியுள்ளதால் மேற்படி ஆவணங்களை ரத்து செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

(3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.16 12:58:39 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.